தீயணைப்புத் துறைக்குக் கால அவகாசம் உண்டா?

ஆள்வோர் யாராயினும், அது மக்கள் நல அரசாகவே இருக்க வேண்டும்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 19 –

ஆள்வோர் யாராயினும், அது மக்கள் நல அரசாகவே இருக்க வேண்டும் என்றும் தீயணைப்புத் துறைக்குக் கால அவகாசம் உண்டா? என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் ஒரு மாத காலம் நடந்திருக்கிறது த.வெ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி! 2021 முதல் 2026 வரை நடைபெற்ற தி.மு.க.வின் 'திராவிட மாடல்' ஆட்சி பல்வேறு சாதனைகளைப் பல்வேறு துறைகளிலும் ஆற்றியிருந்தது. எனினும், சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தது. பிரபல நடிகர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு 108 இடங்கள் கிடைத்தன. பின்னர் பலரின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சியமைத்தது த.வெ.க.!

ஆட்சிக்கு வரும் முன், கடந்த ஆட்சியின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்த துடன், தாங்கள் ஆட்சிக்கு வந்தால், அவற்றைக் களைய உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்திருந்தார். கடந்த சில ஆண்டுகளாக இந்திய அளவில் பெண்களுக்குப் பாதுகாப்பான முதல் மாநிலம், முதல் நகரம் சென்னை, மூன்றாம் நகரம் கோவை என்று புள்ளிவிவரம் சொன்னாலும், 'பெண்களுக்குப் பாதுகாப்பில்லை' என்பதாகத் த.வெ.க. முன்வைத்த பிரச்சாரத்தை மக்கள் நம்பினர். குறிப்பாக சமூக ஊடகங்களில் பெண்கள் பாதுகாப்பு, போதைப் பொருள் புழக்கம், டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு 10 ரூபாய் அதிகம் வாங்கப்படுகிறது என்று இவற்றை வைத்துதான் பெருமளவு பிரச்சாரம் செய்யப்பட்டது.

அன்றாடம் பாலியல் வன்கொடுமைச் செய்திகள்!

ஆட்சி மாறிய பின் இவற்றில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது கேள்விக்குறி! குறிப்பாக, பாலி யல் வன்கொடுமைகளும், சட்டம் ஒழுங்குச் சீர்கேடும் அன்றாட அவலச் செய்திகளாகிவிட்டன.

கோவையில் கடந்த மே மாதம் 19 ஆம் தேதி 10 வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ்நாடு முழுக்க அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கறம்பக்குடி அருகே வாய்பேச முடியாத மாற்றுத் திறனாளிப் பெண்ணைக் காரில் கடத்திச் சென்று பாலியல் தொல்லை (மே 19), மெரினா கடற்கரையில் குதிரை ஓட்டி கொடுத்த பாலியல் தொல்லையால் 6 வயதுச் சிறுமி பாதிப்பு (மே 31), கோவை ராமநாதபுரத்தில் மேலும் ஒரு சிறுமிக்குப் பாலியல் தொல்லை என்று அடுக்கடுக்காகச் செய்திகள் அன்றாடமும்!

காவலர்களுக்கும் பாதுகாப்பில்லை!

'சிங்கப்பெண் சிறப்புப் படை' பெண் காவலருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த காவல்துறை ஆய்வாளர் மீது புகார், சென்னையில் சிறுவனுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக வடபழனி காவல் நிலையத் தலைமைக் காவலர் வேலப்பன் என்பவர் பணி நீக்கம், திருச்செந் தூரில் புகார் அளிக்க வந்த பெண்ணுக்கு ஆபாசத் தகவல் அனுப்பி பாலியல்

தொல்லை கொடுத்த காவலர் இடைநீக்கம் (ஜூன் 13), சிவகங்கையில் பெண் காவலருக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக 3 பேர் கைது, தேவகோட்டையில் பாலியல் தொல்லை புகார் கொடுக்க வந்த பெண்ணிடம் புகார் பெறாமல் அலைக்கழித்த காவல்துறை (மே19), ஓசூர் அருகே காவல்நிலையத்தில் பணியாற்றும் பெண்ணுக்கு லிஃப்ட் கொடுப்பதாக அழைத்துச் சென்று பாலியல் தொல்லை கொடுத்த ஓட்டுநர் (மே 16) என்று காவல்துறையினருக்கும் பாதுகாப்பில்லை; காவல்துறையினராலும் பாதுகாப்பில்லை என்ற சூழல் அச்சமூட்டுகிறது.

வாக்களித்த பெண்கள் முதல் பலரும் கிளர்ந்தெழுந்து சாலையில் மறியல் செய்யும் நிலைதான்!

த.வெ.க.வினர் ஈடுபடும் குற்றச் செயல்கள்!

பல இடங்களில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர், ஆளும் த.வெ.க.வைச் சேர்ந்தவர்கள் என்ற செய்தி மேலும் மக்களை அச்சத்தில் ஆழ்த்துகிறது. திருவண்ணா மலை மாவட்டம் சேத்துப்பட்டு அருகே கர்ப்பிணி பெண்ணுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த யோகேஸ்வரன் என்ற த.வெ.க. தொண்டர் கைது (15.06.2026), மயிலாடுதுறையைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட 42 வயது சிலம்பரசன் என்ற த.வெ.க. தொண்டர் கைது (28.5.2026), இவற்றில் உச்சமாக, சேலம் அருகே நெய்க்காரப்பட்டியைச் சேர்ந்த த.வெ.க. வைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் பல பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததும், வன்கொடுமையில் ஈடுபட்டதும், அவற்றைப் படம் எடுத்து மிரட்டியதும், 50–க்கும் மேற்பட்ட பெண்கள் இத்தகைய கொடுமைக்கு ஆளாகியிருப்பதும் செய்திகளில் வெளிவந்துள்ளது.

15.6.2026 அன்று மட்டும் மணிமங்கலத்தில் 10 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை, ஆண்டிப்பட்டியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமிக்குப் பாலியல் தொல்லை, பூவிருந்த வல்லியில் 7 வயதுச் சிறுமியைப் பாலியல் வன்கொடுமை, கோவில்பட்டி அருகே 16 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை, கும்மிடிப் பூண்டியில் 3 வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொன்று புதரில் வீசப்பட்டுள்ளார்.

ஜூன் 13 வரையிலான 34 நாட்களில் நடந்த பாலியல் குற்றங்கள் மட்டும் 207, இதில் குழந்தைகள் பாதிக்கப்பட்ட குற்றங்கள் 106, த.வெ.க.வினர் தொடர்புடைய குற்றங்கள் 107 என்று ஒரு புள்ளி விவரம் சொல்கிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு!

இன்னொரு புறம், சென்னை விமான நிலையம் அருகே இரண்டு இளைஞர்கள் வெட்டிக் கொலை (மே 16), கிருஷ்ணகிரியில் 2 உடல்கள் மீட்பு (மே 13), நீலகிரியில் 9 ஆம் வகுப்பு மாணவர் அடித்துக் கொலை (மே 11), திருச்சியில் ரவுடி வெட்டிக் கொலை, திருப்பத்தூரில் டி.எஸ்.பி. அலுவலகம் எதிரே பெண் வெட்டிக் கொலை (மே 28), கள்ளக்குறிச்சி அருகே 2500 ரூபாய் பணத் தகராறில் பெண் கொலை செய்து புதைப்பு (ஜூன் 12), கொலை வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராக வந்த 17 வயதுச் சிறுவன் வெட்டிக் கொலை (மே 21), கோயம்பேட்டில் கார் ஏற்றிக் கொலை, திருவாரூரில் மேஸ்திரி கொலை (மே 30), சிதம்பரம் அருகே ஆசைக்கு இணங்க மறுத்த 25 வயதுப் பெண் வெட்டிக் கொலை (ஜூன் 8), சென்னை மணலியில் தொடர் குற்றவாளி ரவுடி பிரசாந்த் சாலையில் ஓட ஓட வெட்டிக் கொலை (மே 22) இன்னும் ஏராளமான செய்திகள் குவிந்தபடி உள்ளன. மேலே குறிப்பிட் டவை ஊடகங்களில் வந்திருப்பனவற்றில் மிகச் சில மட்டுமே! இவையும் உணர்ச்சிவசத்தில் நடைபெற்ற கொலைகள் அல்ல; திட்ட மிட்டு செய்யப்பட்டவை குற்ற நோக்கத்துடன் நிகழ்த்தப்பட்டவை கூட்டுச் சேர்ந்து நடந்த கொலைகள்!

இவை தவிர, ஆணவப் படுகொலைகள் பல தென்மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன. ஒரு மாத காலத்திற்குள் தமிழ்நாட்டில் நடந்திருக்கும் இத்தனை குற்றச் சம்பவங்கள், பாலியல் தொல்லைகளைப் பார்த்துத் தமிழ்நாடு அரண்டு போயுள்ளது!

ஒரு மாத காலத்தில் இவ்வளவு கண்டனத்திற்குள் ளான ஆட்சியை இதுவரை தமிழ்நாடு சந்தித்ததில்லை. டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு 10 ரூபாய் என்று சொல்லி வந்தவர்கள், இன்று, "அந்த 10 ரூபாய் எதனால் வாங்கப்படுகின்றன என்று இப்போது விளக்கம் கொடுக்கிறார்கள்.

விவசாயிகள் ஏமாற்றம்!

'விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படும்' என்று த.வெ.க. அறிவித்திருந்தது. அதன் தேர்தல் அறிக்கையில், சிறு குறு விவசாயிகளுக்கு 100% சதவீதமும், பெரு விவசாயிகளுக்கு 50% சதவீதமும் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்றதும் திடீரென, ரூ.50,000 வரையில் கடன்பெற்றோருக்கு மட்டுமே தள்ளுபடி என்று அறிவித்திருப்பதும், அதற்கு மேல் பெற்றிருப்போருக்குக் கடன் தள்ளுபடித் தொகையைக் குறைத்திருப்பதும் விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல இடங்களில் விவசாயிகள் சாலை மறியல், ஆர்ப்பாட்டம் என்று தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்துத் துறையில் குழப்பங்கள், தொடர் மின் வெட்டுகள் என்று பல துறைகளிலும் புதிய அரசு பெரும் சிக்கல்களையும், கடும் எதிர்ப்புகளையும் சந்தித்து வருகிறது. தொழில்துறையில் தமிழ்நாட்டை விட்டு முக்கியமான ஒப்பந்தங்கள் பறிபோகின்றன. விவசாயத் துறையில் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்குப் பணம் கேட்கப்படுவதாகக் குற்றச்சாட்டு சொல்லிவந்த நிலையில், அது மேலும் அதிகம் கேட்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆய்வு என்ற பெயரால், ஆளுங்கட்சியினர் ஒவ்வொரு அலுவலகத்திலும் போய் செய்துவரும் அடாவடித் தொல்லைகளும் மக்களிடம் வெறுப்பை, எதிர்ப்பையே முளைவிடச் செய்துள்ளன.

ஒன்றிய அரசுடன் இணக்கமான போக்கு என்பது, தமிழ்நாட்டின் உரிமையைப் பலி கொடுப்பதாக இருந்துவிடக் கூடாது என்ற கவலை எல்லோருக்கும் எழுந்துள்ளது. 'மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை' மாற்றிய ஒன்றிய அரசின் நடவடிக்கை போன்ற வற்றுக்கு ஏற்பளிக்கக்கூடாது மறை முகமாக ஒன்றிய அரசின் செயல்களுக்குத் தலையாட்டிவிடக் கூடாது!

தி.மு.க. கூட்டணியில் பங்கேற்று வெற்றி பெற்றாலும், தமிழ் நாட்டில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பா.ஜ.க. ஆட்சி அமைந்து விடக் கூடாது என்ற காரணத்தால் தான் த.வெ.க. கூட்டணிக்கு நான்கு கட்சிகளைச் (இ.கம்யூ., மார்க்சிஸ்ட் கம்யூ., வி.சி.க., அய்.யு.எம்.எல்.) சேர்ந்த எட்டு எம்.எல்.ஏ.க்கள் ஆதரவளித்தனர். அதில் இரண்டு பேர் அமைச்சர்களாகவும் ஆகியுள்ளனர்.

ஆனாலும், யாரை ஊழல்வாதிகள் என்று சொல்லி, எதிர்த்து த.வெ.க. ஆட்சிக்கு வந்ததோ, அந்த முன்னாள் அமைச்சர்கள் பலர், அக்கட்சிகளிலிருந்து விலகி வரும் போது, அவர்களைக் கட்சியில் சேர்த்துக் கொள்வதும், சிலரை எம்.எல்.ஏ. பதவிகளை விட்டு விலகச் செய்து, தங்கள் கட்சியில் இணைத்துக் கொள்வதுமாகத் தொடர்ந்து வரும் செய்திகள் ஏற்கத்தக்கதா?

பொது ஒழுக்கத்தையும், நேர்மையையும் சிதைப்பவை அல்லவா?

மக்கள் இவற்றைத்தான் இந்த அரசிடம் எதிர்பார்த்தார்களா?

பெண்களும், இளைஞர்களும் விரும்பியதாகச் சொல்லப்படும் இந்த ஆட்சியின் முதல் ஒரு மாத கால ஆட்சி, மக்கள் நலனுக்கு உவப்பானதாக இல்லை என்பதே நடுநிலையில் சிந்திக்கக் கூடிய நம்மைப் போன்றவர்களின் கவலையாக இருக்கிறது.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை!

"புதிதாக அரசியல் கட்சி தொடங்கி ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், அவர்களில் 99 விழுக்காட்டினருக்கு முற்றிலும் இது புதிய களம். அரசு இயந்திரம் எப்படிச் செயல்படும் என்பதிலோ, நிர்வாகம் என்றால் என்ன என்பதிலோ அவர்களுக்குச் சற்றும் அனுபவம் இருக்காது. எனவே இவற்றைப் புரிந்துகொள்ளவும், நிதிநிலைமையை அறிந்து கொண்டு, புதிய மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் கால அவகாசம் வேண்டும் என்பதால்தான், "ஆறு மாத காலம் காத்திருப்போம்; அவர்கள் அறிவித்தவற்றைச் செயல்படுத் தட்டும் என்று ஜனநாயகப் போக்கில் நாமும், தி.மு.க. தலைவரும், மேனாள் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்பட பலரும் தெரிவித்தார்கள்.

அந்த 'கால அவகாசம்' என்பது புதிய அரசின் புதிய திட்டங்களுக்குத்தானே தவிர, சட்டம் ஒழுங்குக்கும், மகளிர் பாதுகாப்புக்கும் இல்லை. இவை மக்களின் பாதுகாப்பு தொடர்பானவை. இதில் கால அவகாசம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? தீயணைப்பு வீரர்கள் கால அவகாசம் கேட்க உரிமை உண்டா? காவல் துறை தாங்கள் ஆற்ற வேண்டிய தடுப்பு மற்றும் அவசரக் கடமையை ஆற்றத்தானே வேண்டும்? அதை நெறிப்படுத்தவும், விரைவுபடுத்தவும் தானே முதலமைச்சர் அந்தத் துறையைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்? பின், ஏன் தொடர் பாலினக் கொடுஞ்செய்திகள்?

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள, வரவேற்கப்பட வேண்டிய "சிங்கப் பெண் அதிரடிப்படைக்கு உள்ள அதிகாரம் என்ன, அது எப்படி செயலாற்றப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்! அரசு முன்னெடுக்கும் திட்டங்களை, அதன் செயல்முறையைப் பார்த்துத் தான் விமர்சிக்க முடியும்.

ஆனால், மிகுந்த கவலையோடும், அச்சத்தோடும் மக்கள் இந்த அரசைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் தங்கள் கையில் கொடுத்திருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, அமைதியான வாழ்க்கை வாழும் வகையில் ஆட்சி (Governance) நடத்த வேண்டும் என்று தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆள்வோர் யாராயினும், அது மக்கள் நல அரசாக இருக்க வேண்டும். கவலையும், பொறுப்பும் உள்ள நம்மைப் போன்ற பெரியார் தொண்டர்களின் வேண்டுகோளும், எதிர்பார்ப்பும் அதுதான்! பொறுத்திருந்து பார்க்க இயலாத குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைப்புடன் புதிய ஆட்சி உரியன செய்வது அவசரம், அவசியம்!

மாற்றம் முதலில் அங்கிருந்து தொடங்கட்டும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவையில் "துட்டு' தந்தா பட்டா" "சும்மா வந்தா டாட்டா...!

வருவாய்த்துறை அலுவலகங்களில் வசூல் வேட்டை!

கோவை, ஜூன் 19 -

கோவையில் "துட்டு' தந்தா பட்டா" "சும்மா வந்தா டாட்டா... வருவாய்த்துறை அலுவலகங்களில் வசூல் வேட்டை, கோவை மாவட்டத்தில் பல ஆயிரம் பட்டா மாறுதல், திருத்தம் தொடர்பான விண்ணப்பங்கள் கிடப்பில் முடங்கி போயிருப்பதால் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டத்தில் 3 டிவிசன், 11 தாலூகா, 295 வருவாய் கிராமம், 13 ஒன்றியம், ஒரு மாநகராட்சி, 3 நகராட்சி, 37 பேரூராட்சி அமைந்துள்ளது. மாவட்ட அளவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம், ஆர்டீஓ அலுவலகங்களில் 'பட்டா மாறுதல்' கேட்டு மக்கள் காத்திருப்பது வாடிக்கையாகி விட்டது. சிலர் ஆண்டு, மாத கணக்கில் அலைந்தும் பட்டா மாறுதல், பட்டா வகை மாற்றம், வாரிசு பிரச்னை, சர்வே எண், பட்டா எண் போன்றவற்றில் பிழை திருத்தம் செய்தல், சதுர மீட்டர் கணக்கில் உள்ள பிழைகள் சரி செய்தல் போன்ற பணிகள் முடங்கி கிடக்கிறது. விண்ணப்பதாரர்களை அலையவைப்பது, ஏமாற்றுவது, விரக்தி அடைய செய்வதில் வருவாய்த்துறை அதிகாரிகள் ஒரு சிலர் தீவிரம் காட்டி வருவதாக தெரிகிறது. சில விண்ணப்பதாரர்கள் அரசு அலுவலகங்களுக்கு அலைந்து பட்டா மாறுதல் செய்ய, புறம் போக்கு நிலங்களில் பல ஆண்டுகள் வாழ்ந்து பட்டா பெற முடியாத நிலையில் இறந்து போன அவலமும் இருக்கிறது.

பட்டா இருந்தும் பத்திர பதிவு செய்ய முடியாத அளவிற்கு தடை விதித்தும் வருவாய்த்துறையினர் சிலர் வில்லங்க நடவடிக்கை செய்து வைத்துள்ளனர். மாவட்ட அளவில் பல ஆயிரம் பேர் பட்டா மாறுதல், தனி பட்டா, பிழை திருத்தம் போன்றவற்றிக்கு தீர்வு காண முடியாமல் இருக்கிறது. மாவட்ட நிர்வாகத்திடம் அதாவது மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக புகார் தந்தால், முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு புகார் மனு அனுப்பினால் திரும்ப அது கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று தொடர்ந்து சுழற்சி முறையில் தீர்வு காணாமல் வலம் வரும் நிலைமை இருக்கிறது. 15 நாளில் தீர்வு காணாமல் முடித்து வைக்கப்பட்டதாகவும், பயனாளி செல் போன் எடுக்கவில்லை, வீட்டில் ஆள் இல்லை என எதாவது சாக்கு போக்கு சொல்லி விண்ணப்பங்களை விட்டு விடுவார்கள். திரும்ப விண்ணப்பித்தால், அதை புதிய மனுவாக எடுத்து அதை வழக்கம் போல் சுத்த விட்டு வேடிக்கை பார்ப்பது நடக்கிறது. நீண்ட கால பெண்டிங் மனுக்களை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் பார்த்து தீர்வு காணாமல் விட்டு விடுகின்றனர். இது மக்கள் மத்தியில் கடும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. உயர் அதிகாரிகள், கீழ் மட்ட அலுவலர்களை வேலை வாங்குவதில் மெத்தனமாக இருப்பதால் தான், குறை தீர்ப்பு கூட்டங்களில் மக்கள் தற்கொலைக்கு முயற்சிக்கும் அளவிற்கு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. வேலை செய்யாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க உயரதிகாரிகள் தயங்கும் நிலை உள்ளது. பட்டா மாறுதல், நீண்டகால வசிப்பிடத்திற்கு பட்டா, பிழை திருத்தம் செய்தல் என்பது விரைவாக செய்ய வேண்டிய பணிகள். ஆனால் பணம் பெறவேண்டி நிராகரிப்பு செய்வதை வழக்கமாக்கி விட்டனர். ஆன்லைனில் பட்டா மாறுதல் அப்லோட் செய்தால், சான்று மீது சந்தேகம் என நேரடியாக வரவழைத்து லஞ்சம் கேட்பது பரவலாக நடக்கிறது. ஒன்று அல்லது இரண்டு சென்ட் நிலத்திற்கு பட்டா மாறுதல் செய்ய பல ஆயிரமும், விவசாய நிலங்களுக்கு பல இலட்ச ரூபாய்க்கு அதிகமாக லஞ்சம் வசூலிக்கப்படுகிறது. இதை தடுக்க அரசு முன் வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

திருப்பூரில் கடந்த 12 நாட்களில்

சைபர் கிரைம் மோசடிகள் தொடர்பாக 167 வழக்குகள் பதிவு!

திருப்பூர், ஜூன் 19 –

பள்ளி மற்றும் கல்லூரிகளில் புதிய கல்வி ஆண்டு தொடங்கியுள்ள நிலையில், தங்களது பிள்ளைகளின் உயர் கல்விக்காக கடன் தேடும் நடுத்தர மற்றும் ஏழை, எளிய பெற்றோர்களை குறிவைத்து ஆன்லைன் மோசடி கும்பல் தீவிரமாக வலைவிரித்து வரு கிறது.

இன்ஸ்டாகிராம், பேஸ் புக், வாட்ஸ் அப் போன்ற முன்னணி சமூக வலைதள பக்கங்களில், சிபில் ஸ்கோர் தேவையில்லை, வெறும் 2 சதவீத வட்டி, 24 மணி நேரத்தில் ஒன்றிய அரசின் மானியத்துடன் கூடிய கல்விக்கடன் வழங்கப்படும் என அதிரடி விளம்பரங் களை இந்த கும்பல் அறிவிக்கிறது. தனியார் வங்கிகள் மற்றும் அரசு வங்கிகளில் கடன் கிடைக்காமல் அலைந்து திரியும் பெற்றோர்கள், இந்த கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி அதில் உள்ள எண்களை தொடர்பு கொள்கின்றனர்.

அவ்வாறு தொடர்பு கொள்ளும் பெற்றோர்களை தங்களது சாதுரியமான பேச்சால் நம்ப வைக்கும் மோசடி கும்பல், உங்களுக்கு லோன் பாஸ் ஆகிவிட்டது எனக் கூறி, போலியாக தயாரிக்கப்பட்ட வங்கி ஒப்புதல் ஆவணங்களை வாட்ஸ் அப்பில் அனுப்பி வைக்கிறது. இதனை உண்மை என்று நம்பும் பெற்றோர்களிடம், ஆவண சரிபார்ப்பு கட்டணம், ஜிஎஸ்டி, இன்சூரன்ஸ் தொகை மற்றும் முத்திரைக்கட்டணம் என பல்வேறு காரணங்களைக் கூறி, கூகுள் பே அல்லது போன் பே மூலம் சில ஆயிரம் ரூபாய்களை முன் பணமாக பெற்றுக்கொண்டு, அதன் பிறகு மொபைல் போனை சுவிட்ச் ஆப் செய்து விட்டு ஏமாற்றிவிடுகின்றனர்.

மறுபுறம், பின்னலாடை நகரான திருப்பூரின் முக்கிய அங்கமாக விளங்கும் தொழிலாளர்களின் அவசர பணத்தேவைகளையும்,

வறுமையையும் முதலீடாகக் கொண்டு ஆன்லைன் லோன், ஆப் மோசடிகள் அசுர வேகத்தில் பெருகி விட்டன. தங்களின் அன்றாட குடும்ப செலவுகள், மருத்துவ செலவுகள் மற்றும் அவசர தேவைகளுக்காக பணத்தை தேடும் தொழிலாளர்களை குறிவைத்து. உடனடி கடன் அல்லது ஆவணங்களோ இன்றி நிமிடங்களில் கடன், மானியத்தில் கடன் என பல்வேறு கவர்ச்சிகரமான விளம்பரங்களை சமூக வலைத் பரப்புகின்றனர். அவசர தேவைக்காக இந்த ஆன்லைன் செயலிகளை தொழிலாளர்கள் தங்களது மொபைல் போனில் பதிவிறக்கம் செய்யும் போது, அவர்களின் அறியாமையை பயன்படுத்தி மொபைலில் உள்ள போன் எண்கள் மற்றும் புகைப்பட கேலரி ஆகியவற்றுக்கான அனுமதியை இந்த செயலிகள் திருடி விடுகின்றன.

ஆரம்பத்தில் மிகக் குறைந்த தொகையைக் கடனாக வழங்கும் இந்த நிறுவனங்கள், அடுத்த சில நாட்களிலேயே கந்துவட்டியை விட மோசமான வட்டி மற்றும் அபராதங்களை விதிக்கின்றன. தொழிலாளர்கள் தாங்கள் வாங்கிய அசல் தொகையை விடப் பல மடங்கு தொகையை திருப்பி செலுத்திய பிறகும், கடன் தீரவில்லை என்று கூறி அவர்களின் மொபைலில் இருந்து திருடப்பட்ட புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து, அவர்சுளின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அனுப்பி விடுவதாக மிரட்டுகின்றனர். இந்த அவமானத்திற்கும், மிரட்டலுக்கும் பயந்து தொழிலாளர்கள் தங்களின் உழைப்புப் பணத்தை மொத்தமாக இழந்து தவிக்கின்றனர்.

இதுமட்டுமன்றி, வீட்டுச் செலவுகளுக்குத்துணையாக இருக்க வேண்டும், வீட்டிலிருந்தபடியே மொபைல் போன் மூலம் வருமானம் ஈட்டலாம் என நினைக்கும் நடுத்தர குடும்பத்து இல்லத்தரசிகள் மற்றும் இளம் பெண்களை குறிவைத்து பகுதி நேர வேலை என்ற பெயரில் நூதன மோசடியும் நகரில் அரங்கேறி வருகிறது. உங்களது மொபைல் போனில் வரும் விளம்பரங் களை பார்த்தால் போதும், அல்லது யூடியூப் வீடியோக்களுக்கு லைக் செய்து, கூகுள் மேப்ஸில் பிரபல நிறுவனங்களுக்கு ரேட்டிங் கொடுத்தால் போதும், தினமும் ரூ.5,000 வரை சம்பாதிக்கலாம் என டெலிகிராம் மற்றும் வாட்ஸ் அப் மூலம் ஆசை வார்த்தைகளைக் கூறுகின்றனர். இதனை நம்பி ஆரம்பத்தில் இணையும் பெண்களுக்கு. அவர்கள் செய்யும் சிறு வேலைகளுக்கு உடனுக்குடன் சில நூறு ரூபாய்களை லாபமாக அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தி அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். பெண்கள் இதனை முழுமையாக நம்பியவுடன். அடுத்த கட்ட டாஸ்க் என்று கூறி, அதிக லாபம் பெற வேண்டும் என்றால் குறிப்பிட்ட தொகையை முதலீடு செய்ய வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இதனை நம்பி பெண்கள் தங்களது சேமிப்பு பணம் மற்றும் நகைகளை அடகு வைத்து நூறுகள் தொடங்கி பல்லாயிரக் கணக்கான ரூபாய் வரை ஆன்லைனில் முதலீடு செய்தவுடன், அந்த பணத்தை எடுக்க முடியாதவாறு அக்கவுண்ட் லாக் செய்துவிட்டு மொத்தமாக ஏமாற்றி விடுகின்றனர்.

தொழில் நகரான திருப்பூர் மாநகரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இத்தகைய திட்டமிட்ட ஆன்லைன் மோசடிகளால், அப்பாவி பொதுமக்கள், ஏழை எளிய தொழிலாளர்கள் மற்றும் இல்லத்தரசிகள் என ஏராளமானோர் தங்களின் வாழ்நாள் உழைப்பையும், சேமிப்பையும் இழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. திருப்பூர் மாநகர சைபர் கிரைம் காவல் நிலையத்தில், கடந்த 12 நாட்களில் மட்டுமே இது போன்ற பல் வேறு சைபர் கிரைம் மோசடிகள் தொடர்பாக 167 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற த.வெ.க. ஆட்சியில்

பிரேக் பிடிக்காத அரசு பேருந்தை ஓட்டச் சொல்லி நிர்ப்பந்திக்கும் அதிகாரிகள்!

பயணிகளுக்கும், எங்களுக்கும் பாதுகாப்பில்லை - பணிமனை முன்பு டிரைவர்கள், கண்டக்டர்கள் தர்ணா!

சென்னை, ஜூன் 19 –

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற தவெக ஆட்சியில் கோவையில் பிரேக் பிடிக்காத அரசு பேருந்தை ஓட்ட சொல்லி அதிகாரிகள் நிர்பந்திப்பதாக சுங்கம் 1 பணிமனை முன்பு தற்காலிக டிரைவர்கள் மற்றும் கண்டக்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பழுதான அரசு பேருந்தை முறையாக பராமரிக்க வேண்டும், பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என கோஷம் எழுப்பினர். பின்னர் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தற்காலிக டிரைவர் கவுதமன் என்பவர் கூறியதாவது : இந்த பணிமனையில் தற்காலிக டிரைவர்கள் மற்றும் கண்டக்டர்கள் 50 பேர் உள்ளோம். கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் எங்களை தமிழக அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டும். நேற்று காந்திபுரம் டு கரடிமடை செல்லும் தடம் எண் 35 என்ற பேருந்தை இயக்கி சென்றேன். அப்போது, மாதம்பட்டி அடுத்த குப்பனூர் செல்லும் வழியில் பேருந்து பிரேக் பெயிலியர் ஆனது. நான் உடனே உதவி பொறியாளர் ராமசாமி என்ப வரை செல்போனில் தொடர்பு கொண்டு தகவல் கூறினேன்.

அதற்கு அவர் உனக்கு முன்பு ஓட்டிய டிரைவர் அதே பேருந்தை தானே ஓட்டி சென்றார். அவர் ஏதும் பழுது குறித்து கூறவில்லை. நீ முன் கூட்டியே டிரைவரிடம் கேட்க மாட்டாயா? என அலட் சியமாக பதில் கூறினார். ஒருகட்டத்தில் நீயெல்லாம் தற்காலிக பேருந்து ஓட்டுநர் தானே, எழுதி கொடுத்து விட்டு வேலையை விட்டு போய்விடு என ஏளனமாக பேசினார்.

இதேபோல், பணிமனையில் பேருந்து களை பழுதுபார்க்க மெக்கானிக்கும் போதுமான அளவில் இல்லை. அதிகாரிகளின் அலட்சியத்தால் பயணிகளுக்கும், சொற்ப சம்பளத்தில் வேலை பார்க்கும் எங்களுக்கும் உரிய பாதுகாப்பில்லை. எனவே, இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசா ரணை நடத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

கோவை மாநகர் மாவட்டம், சாரமேடு பகுதி கழக செயலாளர் எஸ்.சேக்அப்துல்லா உடல்நிலை பாதிக்கப்பட்டு இராமகிருஷ்ணா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் தெப்பக்குளம் பகுதி கழக செயலாளர் அ.கண்ணன் உள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏழாஞ்சேரி கெ. வரதன்
ஜூன் 19 (2003)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்க